**S.C.No. 32/2025** **தேதி 12.03.2026**

**அ.சா.1 பரமேஸ்வரி**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –**

எனது கணவருக்கும் ஆஜர் எதிரிக்கும் 20 வருட பழக்கம் என்றால் சரிதான். எனது கணவருக்கு வயது 65 என்றால் சரிதான். எனக்கு வயது 46 என்றால் சரிதான். நான் எனது கணவருக்கு 3 வது மனைவி என்றால் சரிதான். எனது கணவருக்கு அடிக்கடி குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் தவறு. என் மகள் பெரிய பிள்ளை ஆனவுடன் எனது கணவர் குடி பழக்கத்தை விட்டுவிட்டார். எனக்கு செல்போன் பயன்படுத்த தெரியும் என்றாலும் என்னிடம் செல்போன் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் குறித்து விஜயலட்சுமி என்பவர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னதால் தான் தெரியும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எனது போனை நான் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் நான் 10 வருடமாக வேலை செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த வீட்டிற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையே சுமார் 2 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் குறித்து தகவல் தெரிந்தவுடன் நான் சம்பவ இடத்திற்கு 30 நிமிடத்தில் வந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் வேலை பார்க்கும் வீடு சுமார் 20 சென்டில் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு 2 வாசல்கள் உள்ளது என்றால் சரிதான்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடானது காமராஜர் நகரில் உள்ளது என்றால் சரிதான். காமராஜர் நகரை அடுத்து ஜீவா நகர் உள்ளது என்றாலும் ஜீவா நகரை அடுத்து முஸ்லீம் தெரு உள்ளது என்றால் சரிதான். ஜீவா நகர், மற்றும் முஸ்லீம் தெருவில் சுமார் 400 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால்

சரிதான்.

சம்பவம் குறித்து கேள்விப்பட்டு நான் வரும்போது ஜீவா நகர் மற்றும் முஸ்லீம் தெரு வழியாக நான் வரும்போது அங்கு ஆட்கள் இருந்தார்கள் என்றால் நான் பதட்டத்தில் வந்தேன். அதனால் யார் இருக்கிறார்கள் என்பதை பார்க்கவில்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் பொன்னையா என்ற நபர் வீட்டு வேலைக்காக வருவார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடு உள்ள தெருவில் நைட்டி தயாரிக்கும் கம்பெனி இருக்கிறது என்றால் சரிதான். அந்த கம்பெனி மாலை 6.00 மணிக்கு வேலை முடிந்து பூட்டிவிட்டு சென்றுவிடுவார்கள். மேற்படி தெருவானது எப்போதும் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள தெரு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு மேற்கு பக்கம் ஆனந்த் டீக்கடை ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த டீக்கடையில் வியாபாரம் இரவு 8.00 மணி வரை நடக்கும் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு மேற்கு பக்கம் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மண்டபம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். அந்த மண்டபத்தில் ஒரு பூசாரி உள்ளார் என்றால் கிடையாது. மேற்படி மண்டபத்தில் பெண்கள் வழிபாடு செய்துவிட்டு சென்றுவிடுவார்கள்.

நான் குடியிருக்கும் வீட்டின் அருகில் தான் எதிரி வீடு எடுத்து தங்கியுள்ளார் என்றால் அவ்வாறு எனது வீட்டின் அருகில் தங்கவில்லை. சம்பவ சமயத்தில் எனது வீட்டினை சுற்றி மாரிமுத்து, ேஹாட்டல் மாஸ்டர், மற்றும் குண்டுமணியின் பாட்டி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவர்கள் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இரகசிய வாக்குமூலத்தில் நான் நீதிபதி என்னை விசாரித்த போது சுப்பிரமணியம், சந்தானம் என்பவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் தவறு. நான் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத படிக்க

தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எனது மகள் தான் எழுதினார்.

சம்பவம் குறித்து கேள்விப்பட்டவுடன் நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக கூறப்படும் வீட்டிற்கு வர 1மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல. 10 நிமிடத்தில் வந்துவிட்டோம். 10 நிமிடத்தில் வந்துவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் வீட்டில் நானும் எனது கணவரும் பணி செய்தோம் என்றால் சரிதான். எனது கணவர் வாட்ச்மேனாக பணி செய்யும் வீட்டில் வழக்கமாக கட்டில் போட்டு கட்டில் மேல் பெட்சீட்டை விரித்து படுத்திருப்பார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று நான் சென்றபோது எனது கணவர் படுத்திருக்கும் கட்டிலிலும் கட்டில் மேல் இருந்த பெட்சீட்டிலும் இரத்தக்கறையாக இருந்தது என்றால் சரிதான்.

எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது அவருடன் நான் சென்றேனா என்றால் ஆம்புலன்சில் எனது கணவரை தூக்கி சென்றுவிட்டார்கள். நான் காலையில் தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

நான் சம்பவ இடத்தை பார்க்கவில்லை என்றாலும் எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவரின் இறப்பிற்கும் எதிரிக்கும் சம்பந்தமே இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

S.C.No. 32/2025 தேதி 12.03.2026

**அ.சா.2 பாண்டிமுனி**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –**

இராஜபாளையம் குற்றவியல் நடுவர் முன்பு நான் அளித்த இரகசிய வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த இடத்தில் சுப்பிரமணியனும், சந்தானமும் சம்பவ இடத்தில் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இருந்தார்கள் என்றுதான் சொல்லியுள்ளேன். இரகசிய வாக்குமூலத்தில் நான் சுப்பிரமணியனும் சந்தானமும் சம்பவ இடத்தில் இல்லை என்று சொல்லிவிட்டு தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது தகப்பனாருடன் நான் மருத்துவமனைக்கு உடன் சென்றோமா என்றால் இல்லை. அவரை ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள். நாங்கள் ஆட்டோவில் சென்றோம். மருத்துவமனைக்கு போலிசார் வந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரித்தபோது சம்பவம் குறித்து போலிசாரிடம் வாக்குமூலமாக சொன்னோமா புகாராக எழுதிக்கொடுத்தோமா என்றால் வாக்குமூலமாக சொன்னோம். எனது தகப்பனார் இறந்ததை கேள்விப்பட்டு சொந்தக்காரர்கள் வந்தவுடன் அவர்களுடன் கலந்துபேசி தளவாய்புரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். இரண்டு முறை விசாரித்தபோதும் எனது தகபபனாரை ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள். நாங்கள் பின்னால் ஆட்டோவில் தான் சென்றோம் என்று கூறினேன் என்றால் சரிதான். நாங்கள் சென்ற ஆட்டோக்காரரரை விசாரித்தால் நாங்கள் ஆட்டோவில் சென்றோமா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

எனது தகப்பனார் வேலை பார்த்த வீடு எனக்குத் தெரியும் என்றால்

சரிதான். அவர் பணி செய்த வீட்டின் கேட்டிலிருந்து வீட்டின் நுழைவு வாயில் சுமார் 50 அடி தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 அடி இருக்கும். சம்பவம் குறித்து விஜயலட்சுமி சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அவர் சொன்ன பிறகுதான் அங்கு சென்றோம். விஜயலட்சுமி என்பவரின் வயது 75 இருக்கும் என்றால் வயதானவர் என்று தெரியும். வயது தெரியாது. நாங்கள் சம்பவம் குறித்து தெரிந்து அங்கு சென்று பார்த்தபோது எனது அம்மா மயக்கம் போட்டு விழுந்துவிட்டார் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் வீட்டிற்கு நாங்கள் சென்றோமா இல்லையா என்ற விபரம் எதிர்பக்கம் வீட்டில் உள்ள கேமராவை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

சம்பவம் குறித்து கேள்விப்பட்டு நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எனது தகப்பனார் படுத்திருக்கும் பெட்சீட்டில் இரத்தக்கறை இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் எதிரிக்கும் எனது தகப்பனாரின் இறப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.